பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஐப்பசி 26 (11—11—68) திங்கள் ★ வெளியூர் : ஐப்பசி 27 (12—11—68) செவ்வாய் [இதழ் : 121

சிறைச்சாலையில் கல்லூரி வகுப்பு

கைதிகள் கோரிக்கை

திருச்சி, நவ. 11—
சிறையில் உயர்நிலைப் பள்ளி, கல்லூரி ஆகியவைகளுக்கான வகுப்புக்களைத் துவக்கவேண்டும் என்று இங்குள்ள மத்திய சிறைக் கைதிகள் விரும்புகின்றனர்.

'புலவர்' தேர்வில் தேறிய ஆயுள் கைதிகள், தமிழக அரசின் கல்வி ஆலோசகர் திரு. சுந்தரவடிவேலுவுக்கு அளித்த வரவேற்பில் இக் கோரிக்கை அடங்கியுள்ளது.

இடமிருந்தும் இரக்க மனமில்லையே!

அன்பளிப்பாக - இலவசமாக அல்ல - நியாயமான விலைக்கே கொடுங்கள்

ஏழைகட்கு எரியாத வீடுகள் -- அரசின் சங்கட நிலை

நிலச் சொந்தக்காரர்களுக்கு பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, நவ. 11—
"அரசினர் நிலத்திலும், மாநகராட்சியின் நிலத்திலும் எரியாத வீடுகளை எளிதில் கட்டித்தர முடிகிறது; ஆனால் தனியாருக்குச் சொந்தமான நிலங்களில் எரியாத வீடுகளைக் கட்டித்தர அவர்கள் மனப்பக்குவம் பெறாத காரணத்தால்--இரக்கக் குணம் பெறாத காரணத்தால் ஒப்புதல் அளிக்க மறுக்கிறார்கள்!

"இன்னும் சில தனியார், அந்த நிலங்களில் மீண்டும் குடிசைகளைக் கட்டி வாடகைக்கு விட்டு அதிக இலாபம் பெறலாமென நினைக்கிறார்கள்; இதனால், 'எரியாத வீடுகள் கட்ட நிலத்தைக் கொடுங்கள்' என்று கேட்டால், இதுதான் சமயமென்று நான் கைந்து மடங்கு விலையைச் சொல்லுகிறார்கள்! இந்த இடையூறுகளால், பணமிருந்தும் நிலமிருந்தும் அந்த வீடுகள் கட்டப்படாமல் உள்ளன!

"நிலச் சொந்தக்காரர்களாக உள்ள தனியாருக்கு ஒரு வேண்டுகோளைவிடக் கடமைப்பட்டிருக்கிறேன்; நல்ல மனப்பக்குவத்தைப் பெற்று--ஏழை எளியவர்கள்பால் இரக்கச் சிந்தையோடு உங்கள் நிலத்தைத் தருவீர்களானால், உங்கள் பெயரைச்சொல்லி உங்கள் பெயர் நிலைக்க எரியாத வீடுகளைக் கட்டித் தரலாம்! தாராள மனத்தோடு நிலத்தைக் கொடுங்கள்---அன்பளிப்பாக அல்ல---பரிசுப் பொருளாக அல்ல--'ஏழைகளுக்கான எரியாத வீடுகள் கட்ட நியாயமான விலைக்குக் கொடுங்கள்' என்றுதான் கேட்கிறோம். பணமிருந்தும் இடமிருந்தும், 'இரக்கமில்லை' என்றுள்ள நிலை மாற வேண்டும்"

இவ்வாறு பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், சென்னை 12-வது வட்டத்தில் நடைபெற்ற மாநகராட்சி வெற்றி விழாக் கூட்டத்தில் உரையாற்றுகையில் உருக்கமுடன் வேண்டுகோள் விடுத்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

முன்பெல்லாம் மழையால்--வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்கள், மாநகராட்சிப் பள்ளிகளைத் தாங்கள் வாழ்கின்ற கூடங்களாக மாற்றிக் கொள்வதும், அவர்களுக்காக மாநகராட்சிப் பள்ளிப் பிள்ளைகளுக்கு விடுமுறை விடுவதும், வள்ளல் தன்மை உள்ள மக்களும் மாநகராட்சியும் பேருதவி புரிந்து சோறிட்டுக் கஞ்சி வார்த்து--மழை தணிந்து வெள்ளம் தணிந்ததும் தங்களது பழைய இடங்களுக்கே அந்த மக்கள் போவதும் இருபதாண்டுகளாக நடந்துவந்ததை நாம் பார்த்திருக்கிறோம்.

ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில்--கழக அரசு ஏற்பட்ட பிறகு--இந்த மக்களுக்கு அளிக்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ. 40 ஆக இருந்ததை ரூ. 80 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

மாநகராட்சி மன்றம் வழங்கிவந்த நிவாரணத் தொகை ரூ. 10 ஆக இருந்தது; அது இப்போது ரூ. 30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு உயர்த்தி அளித்ததோடு, எரியாத வீடுகளைக் கட்டித்தரும் பணியிலும் கழக அரசு ஈடுபட்டுள்ளது.

முதலில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி--முதலமைச்சர் பெயரால் நிதி திரட்டுவதென்று தீர்மானித்து--அதற்காக ரூ. 40 இலட்சம் இதுவரையில் வசூலிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் துணையோடும் வீட்டு வசதி வாரியத்தின் துணையோடும் அரசு சார்பில் இதுவரையில் பதினைந்து இலட்சம் ரூபாய் செலவில் இரண்டாயிரம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

'ஏன் மிச்ச பணம் செலவிடப்படவில்லை; மீதமுள்ள வீடுகள் ஏன் கட்டப்படவில்லை' என்று கேட்கப்படுகிறது இங்கேயுள்ள சிக்கலை நாம் சிந்திக்க வேண்டும்.

இவர்கள் இதுவரையில் தங்கள் மனதை மாற்றிக்கொள்ளாததால்தான், சுப்பிரமணியம் போன்ற பொறுப்புள்ள காங்கிரசுக்காரர்களும்கூட, 'எங்கே அந்தப்பணம்? ஏன் செலவிடப்படவில்லை?" என்று கேட்கிறார்கள்.

'தென் சென்னைத் தேர்தலுக்குச் செலவிட்டு விட்டார்கள்' என்று சொன்னார்கள்; 'தென் காசித் தேர்தலுக்குச் செலவிட்டு விட்டார்கள்' என்று சொன்னார்கள்.

மாநகராட்சித் தேர்தல் சமயத்திலும், 'அந்தப் பணம் முழுவதும் மாநகராட்சித் தேர்தலுக்காகச் செலவிட்டுக் கும்மாளம் போடுவதாக'ச் சொன்னார்கள்.

இவர்கள் சொல்வதுபோல இந்தப் பணம் தென் சென்னை இடைத் தேர்தலில் செலவாகியிருக்குமேயானால் மீண்டும் அது தென் காசிக்கு எப்படி வந்தது? தென்காசியில் செலவாகியிருந்தால் அதே பணம் மாநகராட்சித் தேர்தலுக்கு எப்படி வந்தது?

ஏழை எளிய மக்களுக்கு எரியாத வீடுகள் கட்டித் தருவதற்கென்று வசூலான துயர் துடைப்பு நிதி அத்தனையும், மாநில அரசின் நிதித்துறை நிர்வாகத்தினரால் தனிக் கணக்கில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது."

அண்ணாவின் புதிய இல்லம்

தொலைபேசி எண் :
73109

புது இல்லம் புகுந்தார் அண்ணா

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி தம்பதிகள் வரவேற்றனர்

சென்னை, நவ. 11—
முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இன்று புதிய இல்லத்தில் குடிபுகுந்தார்கள்.

இன்று காலை 10-45 மணிக்கு புதிய இல்லத்திற்கு வந்து சேர்ந்த அண்ணா அவர்களையும் அண்ணியாரையும், வேளாண்மை அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்களும், அவர் தம் துணைவியாரும் வாயிலில் நின்று வரவேற்றார்கள்.

அண்ணா அவர்களின் உடல்நலன் கருதி---மருத்துவர்களின் அறிவுரைக்கேற்ப--மாற்றியமைக்கப்பட்ட இந்தப் புதிய வீட்டில் அண்ணா அவர்கள் குடியேறினார்கள்.

அடையாறு கிரீன்வேய்ஸ் ரோடிலுள்ள 'கிரீன்வேய்ஸ்' என்ற பெயருடைய இந்த இல்லத்தில் ஏற்கனவே வேளாண்மை அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் குடியிருந்தார்கள்.

இப்போது அதே சாலையில் உள்ள 'திருவரங்கம்' என்னும் இல்லத்தில், அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் குடியேறியிருக்கிறார்கள்.

பம்பாயில் மீண்டும் சிவசேனை வெறியாட்டம்

கழகத் தோழர் குடும்பத்தைக் குறிவைத்துத் தாக்க முயற்சி

பம்பாய், நவ. 11—
சிறிது நாட்களாக நிறுத்தி வைத்திருந்த தங்களுடைய வெறிச் செயலை பம்பாய் சிவசேனையினர் மீண்டும் தொடங்கிவிட்டனர்.

தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் ஒன்றான பாண்டுப் பகுதியில், 6—11—68 அன்று பிற்பகலில் கடைகளை அடைக்கச் சொல்லிவிட்டு, தங்களுடைய செயலை ஆரம்பித்துவிட்டனர்.

பம்பாய் நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் சிறு குடிசைகளை அமைத்துக்கொண்டு, சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் சிவசேனையினர் ஈடுபட்டு வந்தனர். அண்மையில் இந்தக் குடிசைகளை மாநகராட்சியினர் காவல் துறையினர் உதவியுடன் காலி செய்தனர்.

இதனால் ஆத்திரம்கொண்ட சிவசேனையினர், இந்தப் பகுதிகளில் வாழும் தமிழர்களைப் பழிவாங்குவதில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாகச் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் பாண்டுப் பகுதியில் தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாக்களை மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பெரிதும் உதவிய தோழர் ஆறுமுகம் அவர்களையும் -- அவர்களுடைய நண்பர்களையும் தாக்குவதில் முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளனர்.

பாண்டுப் முன்னணித் தோழரான தோழர் முத்தையா அவர்களையும் அவருடைய குடும்பத்தினரையும் தாக்குவதற்குப் பெரும் கூட்டமாக அன்று இரவு வந்திருக்கிறார்கள்; சரியான சமயத்தில் தோழர் முத்தையா குடும்பமும் அக்கம்பக்கத்தவர்களும் தங்களுடைய இடங்களைக் காலி செய்துவிட்டதால் தப்பித்துக்கொண்டனர்.

செய்தியறிந்தவுடன் பம்பாய் தி. மு. க. தலைமைக் குழுச் செயலாளர் தொ. து. அன்புச்செழியன், மற்றும் பல கழக முன்னணித் தோழர்கள், பாண்டுப் பகுதி மாநகராட்சிமன்ற உறுப்பினர் தீனபாமா பட்டில் அவர்களோடு தொடர்புகொண்டும், பாதிக்கப்பட்ட தோழர்களுக்கு ஆறுதல் கூறியும், பம்பாய் உயர்தர காவல் துறையினருடனும் தொடர்புகொண்டு கலவரங்கள் மேலும் தொடராமல் இருக்கப் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள்.

திரு. தொ. து. அன்புச்செழியன், விரைவில் தமிழக அமைச்சர்களுடன் கலந்து பேசி, பம்பாய் தமிழர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு வசதிகளைச் செய்து கொடுக்குமாறு மராட்டிய அரசை கேட்டுக்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ள இருக்கிறார்.

அயூப் கான் உயிருக்கு வந்த ஆபத்து

குறி தவறியதால் மயிரிழையில் பிழைத்தார்

புதுடில்லி, நவ. 10—
பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் மயிரிழையில் உயிர் தப்பினார்.

பெஷாவரில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் கலந்துகொண்டபோது, மேடையை நோக்கி ஒருவன் துப்பாக்கியால் சுட்டான்.

குறி தவறியதால் அவர் உயிர் தப்பியிருக்கிறார்.

சுட்டவன் ஓர் இளைஞன். அவனை உடனே போலீசார் பிடித்துவிட்டனர். கூட்டத்தினர் அவனை அந்த இடத்திலேயே தீர்த்துக் கட்ட முனைந்தனர்; எனினும், 'அவனை ஒன்றும் செய்யாமல் போலீசிடம் ஒப்படையுங்கள்' என்று அயூப் கான் கூறினார்.

அயூப் கானுக்கு எதிராகக் கடந்த 4 நாட்களாக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடந்து வருவது தெரிந்ததே.

அயூப்கான் பதவிக்கு வந்த கடந்த பத்தாண்டுக் காலத்தில் இதுவரை நடந்திராத அளவுக்கு மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சிறு நீர்ப்பாசனத் திட்டங்களில் தமிழக அரசின் அக்கறை

'உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு திட்டமிட்டுச் செயலாற்றுகிறது'

தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் பெருமிதம்

சென்னை, நவ. 11—

" தமிழகத்தை பொறுத்தவரையில் ஆற்றுத் தண்ணீரை எவ்வளவுக்கு எவ்வளவு விவசாயத்துக்கு பயன்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு பயன்படுத்த ஆற்றில் அணை கட்டி இருக்கிறோம்.

" இதைத் தவிர, தமிழக அரசு சிறு நீர்ப்பாசனத் திட்டங்களிலும் இப்போது அதிகக் கவனம் செலுத்தி வருகிறது. ஒவ்வொரு மாதமும் தமிழகத்தில் ஆயிரக் கணக்கான புதிய கிணறுகள் விவசாயத்துக்காகத் தோண்சீப்படுகின்றன; ஆயிரக்கணக்கான மோட்டார் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டிருக்கிறது.

" பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் தொடங்கினுல் அதன் பலன் கிடைக்க நீண்ட நாட்களாகும்; இதை உணர்ந்து தமிழக அரசு, சிறு நீர்ப்பாசனத் திட்டங்களில் கவனம் செலுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்க முனைவது வரவேற்கத்தக்கது "

இவ்வாறு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், இராஜாஜி மண்டபத்தில், 'இந்திய விவசாயத்தின் அடிப்படைகள்' என்ற ஆங்கிலப் புத்தகத்தை வெளியிட்டுப் பேசுகையில் பெருமிதமுடன் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது :—

" நம் நாட்டில் விவசாயம் வாழ்க்கையின் வழிகாட்டியாக மட்டும் அல்ல -- அது ஒரு தொழிலாகவும் இருக்கிறது; எனவே, விவசாயத்தை அபிவிருத்தி செய்வது அனைவரது கடமையாகும்.

" மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது, இந்தியத் துணைக்கண்டம் விவசாயத் துறையில் பின் தங்கியிருக்கிறது; ஜப்பானில் ஒரு ஏக்கரில் விளையும் தானியத்தில் மூன்றில் ஒரு பங்குதான் நம் நாட்டில் விளைகிறது; இதைத் தவிர்க்க ஆற்று நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுத்து அதை விவசாயத்துக்குப் பயன்படுத்தவேண்டும்.

" அத்துடன், நவீன விவசாயக் கருவிகளையும், அதிக விளைச்சல் தரும் விதைகளையும் விவசாயிகள் பயன்படுத்த அரசாங்கம் வழிவகை செய்து கொடுக்க வேண்டும்."

தனி மாநிலம் கோருகின்றனர் ஆதிவாசிகள்

மத்தியப் பிரதேசத்திலுள்ள ஆதிவாசிகள் வாழும் பகுதிகளை ஒன்று சேர்த்து அதனை ஒரு தனி மாநிலமாக ஆக்கவேண்டும் என்ற ஒரு கோரிக்கை எழுந்துள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதரவுடன் இயங்கும் கிசான் சபை, மேற்படி கோரிக்கையை எழுப்பியுள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மேலிட உறுப்பினர் ஒருவர் இதற்காகத் தயாரித்துள்ள திட்டத்திற்கு மற்ற கம்யூனிஸ்டுத் தலைவர்களின் ஆதரவும் உண்டு என்று தெரிய வருகிறது.

தமிழகத்தின் நான்காவது திட்ட காலத்தில்....

3,000 கிராமம்--12,000 குக்கிராமம் மின்சார வசதி பெறும்

ரூ. 60 கோடி செலவிடப்படும்

சென்னை, நவ. 11—

தமிழ்நாட்டின் நான்காவது திட்ட காலத்தில் கிராமங்களுக்கு மின்சார வசதி வழங்குவதற்கு மட்டும் ரூ 60 கோடி செலவிடப்படும்.

அடுத்த ஐந்தாண்டுகளில் அதிகப்படியாக 3 000 கிராமங்களும், 12,000 குக்கிராமங்களும் மின்சார வசதி பெறும். 2,50,000 பாசனக் கிணறுகளுக்கும், 50,000 பம்பு செட்டுகளுக்கும் மின்சார இணைப்புக் கொடுக்கப்படும்.

நான்காவது திட்டத்தில், விவசாயத்துடன் மின்சார உற்பத்திக்கு முதலிடம் தரப்பட்டிருக்கிறது;

இத்துறையில் சுமார் ரூ. 200 கோடி -- அதாவது மொத்த திட்ட முதலீட்டில் மூன்றிலொரு பங்கு முதலீடு செய்யப்படும்.

தற்போதைய மின்சார உற்பத்தி சக்தி நான்காவது திட்ட காலத்தில் இரட்டிப்பாக்கப்படும். இப்போது நெய்வேலியிலிருந்து கிடைக்கும் 400 மெகாவாட்டைத் தவிர மொத்தம் 1,070 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகிறது.

மேற்கொண்டுள்ள திட்டங்களைத் தொடர்ந்து நடத்தி முடிப்பதுடன், புதிய திட்டங்கள் மூலமும் உற்பத்தியை இரட்டிப்பாக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

"இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் கிராமப்புறங்களுக்கு மின்சார வசதி செய்து தருவதில் முதலாவதாகவும், மின்சார வளர்ச்சி -- விகியோகத்தில் மூன்ருவதாகவும் விளங்குகிறது" என்று மாநில மின்சார வாரியத் தலைவர் திரு. வி. பாலசுந்தரம் கூறினுர்.

ரூ 15 கோடி செலவில் பாண்டியாறு—புன்னப்புழா நீர் விசைத் திட்டம்; ரூ. 6.5 கோடி செலவில் கோலத்திப்புழை நீர் விசைத் திட்டம்; ரூ 2.5 கோடி செலவில் குந்தா நீர் விசைத் திட்டத்தின் நான்காவது கட்டம்; ரூ. 1 கோடி செலவில் நடுவட்டம் திட்டம்—(இவையெல்லாம் நீலகிரியில் உள்ளவை); ரூ. 30 கோடி செலவில் நெல்லை மாவட்டத்தில் தாமிரவருணித் திட்டம் ஆகியவை, புதிதாக எடுத்து நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களாகும்.

இந்தப் புதிய திட்டங்களைத் தவிர, எண்ணூரில் தற்போது அமைந்துவரும் அனல் மின்சாரத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தப்படும்.

மத்திய அரசின் திட்டமான நெய்வேலியில் கூடிய விரைவில் மின்சார உற்பத்தியை 400 மெகாவாட்டிலிருந்து 500 மெகாவாட்டாகவும், அடுத்த ஆண்டு 600 மெகாவாட்டாகவும் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நெய்வேலி மின்சாரம் முழுவதையும் தமிழகமே பயன்படுத்திக்கொள்கிறது.

நெய்வேலி மின்சார உற்பத்தி நிலையம் இப்பொழுது சென்னை கிரிட்டுக்கு ஆண்டுக்கு 180 கோடி யூனிட் மின்சாரம் வழங்குகிறது; இது 200 கோடி யூனிட்டாக அதிகரிக்கப்படும்.

இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வரும் கல்பாக்கம் அணுசக்தி நிலையம், 1973-ம் ஆண்டுவாக்கில் உற்பத்தி துவங்குமென எதிர்பார்க்கப்படுகிறது; அதன் மூலம் சென்னை கிரிட்டுக்கு மேலும் 200 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும்.

" ஒகனேக்கல் திட்டம் இரு மாநிலங்களின் திட்டமாகும்; அது நிறைவேறுவது இரு மாநிலங்களுக்குமிடை ஏற்படும் ஒப்பந்தத்தைப் பொருத்திருக்கும்" என்று திரு. பாலசுந்தரம் கூறினுர்.

" தூத்துச்குடி மின்சாரத் திட்டத்தையும் நான்காவது திட்டத்தில் சேர்க்கத் தமிழகம் வற்புறுத்தும்; இது அனல் நிலையமாகவோ அல்லது அணு நிலையமாகவோ இருக்கலாம்" என்றும் அவர் சொன்னுர்.

'யார் ஆட்சியில் இருந்தாலும் அரசு பொதுவானது'

'குற்றங் குறைகளைக் கட்சிக் கண்ணேட்டமின்றி எடுத்துக்காட்டுக'

சுற்றுலா புறப்பட்ட செய்தியாளர்களிடை அமைச்சர் கருணாநிதி

சென்னை, நவ. 10—

தமிழகத்தில் ஐந்து மாவட்டங்களின் வளர்ச்சித் திட்டப் பணிகளை காண்பதற்குச் சுற்றுப்பயணம் செல்லும் பத்திரிகை நிருபர்கள் குழுவை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் வழியனுப்பிவைத்தார்.

"வட ஆற்காடு, சேலம். தர்மபுரி, கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டங்களைப் பத்திரிகையாளர் பார்வையிட்டு மக்களுக்கு விளக்க வேண்டும்" என்ற கருத்தோடு தமிழக அரசு இந்தப் பயன்மிக்க சுற்றுப்பயணத்திற்கு ஏற்பாடு செய்துள்ளது.

தமிழகத்திலுள்ள எல்லாப் பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் இந்தப் பயணத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், பத்திரிகை நிருபர்களுடன் சிற்றுண்டி அருந்தி மகிழ்வோடு அனுப்பி வைத்தார்.

புறப்படுவதற்குமுன் நடந்த வழியனுப்புக் கூட்டத்தில் அமைச்சர் கருணாநிதி உரையாற்றினுர்.

செய்தித் துறை இயக்குநர் வாசுதேவன் வரவேற்றுப் பேசினுர்.

அமைச்சர் மு. கருணாநிதி பேசுகையில் கூறியதாவது :—

"நீங்கள் செய்யும் பயணம் பயனுள்ளதாக இருக்கும். நீங்கள் கண்டதை --- கேட்டதை --- உணர்ந்ததை --- அரசும் மக்களும் அறியும் வகையில் உங்கள் ஏடுகளில் விமர்சனம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

ஐந்து மாவட்டங்களில் அரசுத் துறையில் ஏற்பட்டுவரும் வளர்ச்சியினையும், சீரணியின் பணிகளையும் நீங்கள் கண்டறிந்து உணருகின்ற குற்றங் குறைகளையும் எடுத்துக் கூறுவீர்களானுல், அரசு அதிகாரிகளுடன் கலந்து தவறுகளைப் போக்க முயல வழி ஏற்படும்.

கருத்து வேறுபாடு கொண்ட பத்திரிகைகளைச் சேர்ந்தவர்கள் இன்று ஒன்ருக வந்திருக்கிறீர்கள்; அரசுக்கு விரோதமாக உள்ள பத்திரிகையாளரும் வந்திருக்கலாம்; வேறு கட்சியாளராகவும் இருக்கலாம்.

யார் அரசு அமைத்தாலும், அது எல்லோருக்கும் பொதுவானது; எனவே, எதிர்க் கட்சி என்ற முறையில் விமர்சனம் செய்ய மாட்டார்கள் என்று கருதுகிறேன். நல்ல வகைகளையும் திருத்தப்பட வேண்டியவைகளையும் எடுத்துக் கூறுங்கள்.

திட்டங்களின் பலன்களை எழுதுவதோடு உல்லாசப் பயணத்தில் உள்ள நல்ல காட்சிகளையும் கலந்து எழுதினுல், படிப்பவர்களுக்குச் சலிப்புத் தட்டாமல் இருக்கும் மேலும் அதைப் படித்தவுடன், உல்லாசப் பயணம் செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரிக்க முடியும்.

ஒரு வார காலத்தில் சுற்றுப்பயணத்தை முடிப்பதற்கு ஐந்து மாவட்டங்கள் மட்டும் சேர்க்கப்பட்டிருக்கின்றன; மீண்டும்மற்ற இடங்களையும் பார்க்க மற்றும், ஓர் ஏற்பாட்டை அரசு செய்யும்."

கருநாடகத்தின் சிறப்பு

"நம்முடைய மாநிலத்தில் யானைத் தந்தத்தால் செய்யப்படும் பொருள்கள் உலகப் புகழ் வாய்ந்தவை. 'கரி' என்ற கன்னடச் சொல்லுக்கு 'யானை' என்று பொருள்; 'கருநாடகம்' என்ருல், 'யானைகள் நிறைந்த நாடு' என்று பொருள்.

" இங்குள்ள கருப்பு மண் செழிப்பு வாய்ந்தது. 'கரிநாடு' என்ருல், 'செழிப்பான மண் வளம் கொண்ட நாடு' என்றும் ஒரு பொருள் உண்டு.

" 'கருநாடகம்' என்ற இந்த அழகிய சொல்லுக்கு, 'மிகவும் தொன்மை வாய்ந்த நாடு' என்றும் பொருள் கூறலாம்.

" கருநாடகம் என்ற சொல்லுக்கு இன்னும் எத்தனையோ பொருள்கள் சொல்ல முடியும்; அவையனைத்தும் இயற்கையையும், இந்த நாட்டின் மண் வளத்தையும், இங்கு வாழும் மக்களையும் குறிப்பிடுவனவாகவே இருக்கும்.

" இன்றில்லாவிடினும், என்ருவது ஒரு நாள், 'கருநாடகம்' என்ற சொல்லுக்கு அதிகாரபூர்வமான ஒப்புதல் கிடைக்கத்தான் போகிறது"

என்று 'டெக்கான் ஹெரால்டு' ஆங்கில நாளேட்டில் ஒரு வாசகர் எழுதியிருக்கிருர்.

தமிழ் நாடு முழுவதிலும் விளையாட்டுப் போட்டி

பொங்கல் திருநாளையொட்டி நடத்த தமிழக அரசு திட்டம்

மாணவர்--பொதுமக்கள் கலந்துகொள்வர்

சென்னை, நவ. 11—

பொங்கல் திருநாளையொட்டித் தமிழ்நாடு முழுவதும் விளையாட்டுப் போட்டி நடத்தத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகள், மாவட்ட விளையாட்டுக் கழகம் மூலம் செய்யப்பட்டு வருகிறது; இதற்கான செலவுகளை, அரசு ஏற்றுக்கொள்கிறது.

முதன் முதலில் மாவட்ட அளவில் போட்டிகள் நடைபெறும்; பின்னர் ஒவ்வொரு வட்டாரமாக நடத்தப்படும்.

பின்னர், வட்டார அளவில் வெற்றி பெறும் வீரர்கள், சென்னையில் விளையாடுவார்கள்.

போட்டிகள் அனைத்தும், மாவட்டத் தலைநகர்களிலேயே நடைபெறும்.

விளையாட்டுப் போட்டியில் ஓட்டப் பந்தயம், வாலிபால் (கைப்பந்து), கால் பந்து, பூப்பந்து, கூடைப் பந்து, கபடி ஆகியவை இடம் பெறும்.

வட்டார விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் டிசம்பர் 15-ந் தேதிக்குள் முடிந்துவிடும்; பின்னர் மாநிலப் போட்டிகள், சென்னையில், டிசம்பர் 20-ந் தேதி நடைபெறும்.

ஒவ்வொரு போட்டிக்கும் மனுச் செய்ய தேதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன; அதன் விவரம் வருமாறு :—

நவம்பர் 30-ம் நாளுக்குள் ஓட்டப் பந்தயம், கைப் பந்து, கபடி, பூப்பந்து ஆகிய போட்டிகளுக்கு மனுச் செய்ய வேண்டும்.

கூடைப்பந்து, கால்பந்து ஆகிய போட்டிகளுக்கு நவம்பர் 20-ம் நாளுக்குள் மனுச் செய்ய வேண்டும்.

மாவட்டவாரியாக நடைபெறும் போட்டிகளின் நாட்கள் விவரம் :-

டிசம்பர் 6-லிருந்து 8-ம் நாள் வரை கைப்பந்துப் போட்டியும், 9-லிருந்து 13-ம் நாள்வரை பூப்பந்து, கபடி போட்டிகளும் நடைபெறும்.

கால்பந்து போட்டி நவம்பர் கடைசி வாரம் முதல் டிசம்பர் 10-ம் நாள் வரையிலும், ஓட்டப் பந்தயம் டிசம்பர் 14-லிருந்து 15-ம் நாள் வரையிலும் நடைபெறும்.

போட்டிகளுக்கு மனுச் செய்ய விரும்புவோர், மாவட்ட விளையாட்டுப் போட்டிக் கழக முகவரிக்கு எழுதவேண்டும்.

போட்டிகளில், மாணவர்களும், பொதுமக்களும் கலந்துகொள்ளலாம்.

'முதியவர்களைக் கைவிடாதீர்'

நிஜலிங்கப்பா வேண்டுகோள்

பம்பாய், நவ. 9 —

" அரசியல் இயக்கங்களிலும், நிர்வாகத்திலும் இளைஞர்களைச் சேர்க்க வேண்டுமென்பதற்காக முதியவர்களைப் புறக்கணிக்க வேண்டியதில்லை; முதியவர்களின் அனுபவம், இன்றைய நிலைமைக்கு அவசியம்"

என்று, அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா, விழா ஒன்றில் கூறியிருக்கிருர்.

பத்துக் கோடி பேர் வாக்களிப்பர்

1.16 இலட்சம் வாக்குச்சாவடிகள் அமையும்

தேர்தலுக்கான ஐந்து ஒழுங்கு விதிகள் வகுப்பு

பிப்ரவரியில் நடைபெறும் இடைத்தேர்தல்--தேர்தல் குழு ஏற்பாடு

புதுடில்லி, நவ. 9—

மேற்கு வங்கம், பீகார், உத்தரப் பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் பிப்ரவரியில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தல்களுக்காக 5-அம்ச குறைந்தபட்ச ஒழுங்கு நியதி ஒன்றைத் தேர்தல் குழு வகுத்துள்ளது; இதனைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறு வலியுறுத்தும்பொருட்டு அந்த மாநிலங்களிலுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் தலைமைத் தேர்தல் ஆணையர் சென் வர்மா விவாதிப்பார்; இதற்காக அவர் அடுத்த மாதம் நான்கு மாநிலங்களுக்கும் செல்வார்.

வன்முறைச் செயல்களைத் தவிர்க்கவும், தேர்தல் பிரசாரத்துக்கு சமய வழிபாட்டு இடங்களைத் தவிர்க்கவும் ஒழுங்கு நியதி கோருகிறது.

"அரசியல் கட்சிகள் இந்தக் குறைந்தபட்ச ஒழுங்கு நியதியைப் பின்பற்றுமானல் இடைத் தேர்தல்கள் மிக அமைதியாக நடைபெறும்" என்று, சென் வர்மா கருதுகிருர்.

இடைத்தேர்தலில் 10 கோடி வாக்காளர்கள் வாக்குப் பதிவு செய்ய இருக்கிருர்கள்.

சுமார் 1.16 இலட்சம் வாக்குச் சாவடிகள் அமைக்க வேண்டியிருக்கும் என்று அதிகாரபூர்வமாக மதிப்பிடப்படுகிறது.

1967-ல் நடந்த பொதுத்தேர்தலின்போது 99 ஆயிரம் வாக்குச் சாவடிகளே நிறுவப்பட்டன.

"மிக ஒதுங்கிய பகுதியாக இருந்தாலும்கூட, எந்த வாக்காளரும் தமது வாக்கை அளிப்பதற்காக இரண்டு மைலுக்கு மேல் நடக்கலாகாது" எனறு தேர்தல் குழு முடிவு செய்துள்ளதால் இடைத் தேர்தலில் வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கைக் கூடுதலாகிறது.

இந்நான்கு மாநிலங்களிலும் வாக்காளர் எண்ணிக்கையும் சுமார் 5 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

30-இலட்சம் பேர் புதிய வாக்காளர்கள்

வயது குறைபபுக் காரணமாக வாக்குரிமை பெறுகின்றனர்

இலண்டன், நவ. 9—

'21-வயது மந்தவர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்' என்ற தற்போதைய முறையை மாற்றி, '18 வயது வந்தாலே அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படும்' என்ற பிரிட்டனின் புதிய வயது வரம்பு நிர்ணயிப்பு மசோதா வெளியிடப்பட்டுவிட்டது.

இதுபற்றிய அறிவிப்பு முன்னரே வெளியாகியிருந்தபோதிலும், அரசு மசோதா இப்போதுதான் வெளியாகியிருக்கிறது.

வயது குறைப்புக் காரணமாக, 30-இலட்சம் புதிய வாக்காளர்கள், வாக்குரிமை பெறுகின்றனர்.

இலண்டனில் நேரு நினைவு நிகழ்ச்சி

நிதி திரட்டவும் முயற்சி

இலண்டன், நவ. 9—

இரண்டாவது நேரு நினைவுச் சொற்பொழிவு அவர் பிறந்த நாளான நவ. 14-ம் நாள் நடைபெறும்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் நடக்கவிருக்கும் இந்நிகழ்ச்சியில் மௌண்ட்பாட்டன் பிரபு கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்; அவர் பேசவிருக்கும் தலைப்பு, 'நேருவும், ஆட்சி மாற்றமும்' என்பதாகும்.

அந்தப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் சர் எரிக் ஆஷ்பி தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்ச்சியில், மௌண்ட்பாட்டன் குடும்பத்தினர், இளவரசர் சார்லஸ், இந்தியத் தூதர் திரு. எஸ். எஸ். தாவன், திருமதி தாவன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

சொற்பொழிவிற்குப் பிறகு முன்னுள் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரும், தற்போதைய டிரினிடி கல்லூரித் தலைவருமான திரு. பட்லர் ஒரு வரவேற்புக்கு ஏற்பாடு செய்துள்ளார்; டிரினிடி கல்லூரியில்தான் நேரு உயர் கல்வி கற்ருர்.

ஈராண்டுக்கு ஒருமுறை நேரு நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்தப்படுகிறது; இதற்கு இலண்டனில் உள்ள நேரு நினைவுக் குழு ஏற்பாடு செய்துள்ளது.

இதே குழு, நேரு நினைவாப் படிப்புதவிப் பணம் வழங்குவதற்காக ஓர் இலட்சம் பவுன்கள் நிதி ஒன்றை ஏற்படுத்தவும் முயற்சி மேற்கொண்டுள்ளது.

முதல் நேரு நினைவுச் சொற்பொழிவு 1966-ல் நடைபெற்றது. சொற்பொழிவு நிகழ்த்தியவர் திரு. பட்லர்.

சென்னை ரப்பர் தொழிற்சாலை விரிவாகும்

ரூ. 5 கோடி செலவிடப்படும்

நாளதோறும் 1000 சைக்கிள் டயர்களும் தயாரிக்க ஏற்பாடு

அமெரிக்க 'மேன்ஸ்பீல்டு' ரப்பர் கம்பெனித் தலைவர் ஜேம்ஸ் எச். காப்மேன் சென்னை வந்துள்ளார்; அவர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:—

"சென்னையில் உள்ள 'மெட்ராஸ் ரப்பர் பாக்டரி' தொழிற்சாலையில் ஆண்டு ஒன்றுக்கு 3,60,000 'டயர்'கள் தயாரிக்கப்படுகின்றன; ரூ. 5 கோடி செலவில் இந்தத் தொழிற்சாலை விரிவுபடுத்தப்படும்.

"விரிவுபடுத்தப்பட்ட பின்பு, நாள் ஒன்றுக்கு 2,000 டயர்கள் உற்பத்தி செய்யப்படும்.

"அடுத்த ஆண்டு மார்ச் திங்கள் முதல் சைக்கிள் டயர்களும் தயாரிக்கத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது; அதன்படி, நாள் ஒன்றுக்கு 1,000 சைக்கிள் டயர்கள் தயாரிக்கப்படும்."

சேலம் மாவட்டத்தில் சிறு தொழில் அமைப்பு

176 மனுக்கள் ஏற்பு

சேலம், நவ. 11—

"சேலம் மாவட்டத்தில் சிறு தொழில்கள் அமைக்க தேசிய சிறு தொழில் அமைப்பு நிறுவனத்திற்கு 176 மனுக்கள் வந்துள்ளன; இதற்கு மொத்தச் செலவு ரூ. 61 இலட்சம் ஆகும்" என்று மாவட்டக் கலெக்டர் மதிப்பிடுகிருர்.

சேலம் மாவட்டத்தில் சிறு தொழில்களுக்கு ஊக்கமளிக்க ஆகஸ்டில் தீவிர இயக்கம் நடத்தப்பட்டது; 307 மனுக்கள் வந்தன; ஒரு கோடி 9-இலட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டது.

இம்மனுக்கள் அனைத்தும் தேசிய சிறு தொழில் அமைப்பு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக மாவட்டக் கலெக்டர் கூறினர்.

வ. ஆற்காட்டில் விவசாயப்பண்ணை

இரு சர்க்கரை ஆலைகள் துவங்கத் திட்டம்

விவசாய -- கலைக் கல்லூரிகள் துவங்கவும் ஏற்பாடு

வேலூர், நவ. 11—

"வடாற்காடு மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி துவங்க ரூ. 25-இலட்சமும், 600-ஏக்கர் நிலமும் அளித்தால் அரசு அதற்கு அனுமதி வழங்கும்" என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், ஆட்சித் தலைவர் பி. எம். பெல்லியப்பா தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் இரண்டு சர்க்கரை ஆலைகள் துவங்க அரசு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

ஆரணிக்கு அருகில் கூசுமலைக் குப்பத்தில் 1,200-ஏக்கர் நிலத்தில் ஒரு விவசாயப் பண்ணை துவங்கப்படும்.

சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து, வரும் சனவரித் திங்கள் தண்ணீர் விடப்படும்; அங்கு தீவிர நெல் சாகுபடி செய்யப்படும்

வேலூரில் அரசு கல்லூரி துவங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது; இந்தக் கட்டிடம் ரூ 8.50 இலட்சம் செலவில் கட்டப்படும்.

வரும் ஆண்டில் ஆம்பூரில் ஒரு கலைக் கல்லூரி துவங்கப்படும்.

உழைக்காமல் கிடைத்த வருமானம்

திருமலை, நவ. 11—

அக்டோபரில் மட்டும் திருப்பதி ஏழுமலையானுக்கு, உண்டியலிலிருந்து ரூ. 16 88 220 41 கிடைத்திருக்கிறது; கோயிலின் மற்ற வருமானங்களை இன்னமும் கணக்கெடுக்கவில்லை.

புரட்டாசித் திங்களில் 9-நாட்கள் நடைபெற்ற விழாவில் மட்டும் ரூ. 8,03,432-ம், ரூ. 1 இலட்சம் மதிப்பில் பொன் நகைகளும் கிடைத்திருக்கிறது.

உணவு நெருக்கடி தீர்ந்தது

வ. ஆ. மாவட்டக் கலெக்டர் தகவல்

வேலூர், நவ. 9—

வ. ஆ. மாவட்ட வடக்கு -- தெற்கு வளர்ச்சிக் குழுக்களின் கூட்டுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பெல்லியப்பா பேசுகையில், 'வட ஆற்காடு மாவட்டத்தை எதிர்நோக்கியிருந்த உணவு நெருக்கடி, தஞ்சையிலிருந்து அரிசியை வரவழைத்ததன் மூலம் சமாளிக்கப்பட்டுவிட்டது; இனி நெருக்கடி எதுவும் இராது' என்று தெரிவித்தார்.

"கிடைக்கும் தானியங்களைச் சீராக வினியோகிப்பதில், ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும்" என்று அவர் கேட்டுக்கொண்டார்.

"மைலோ ஊழல் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அனைவர்மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது" என்ருர் அவர்.

எட்டு ஊராட்சி ஒன்றியங்கள் தவிர மற்ற ஒன்றியங்கள் 'செஸ் சர்சார்ஜை' உயர்த்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கேர் நிறுவனம் தனது திட்டத்தை இறுதியாக்காததால், மத்திய சமையல் இடங்கள் தீர்மானிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு ஒன்றியத்துச்கும், ஒரு மத்திய சமையல் இடமும், காய்கறித் தோட்டமும் இருக்கும் என்ருர்.

"நில அடமான பாங்கிகள் திட்டம்மூலம் விவசாயிகளுக்குக் கடன் தரும் புதிய ஏற்பாட்டின்படி ரூ. 61 இலட்சம் அனுமதிக்கப்பட்டது; இதில் ரூ 33-இலட்சம் இதுவரை வினியோகிக்கப்பட்டுள்ளது; சாத்தனூர் திட்டத்தின்கீழ் இருபோகச் சாகுபடி வெற்றிகரமாக உள்ளது. சன. 1-லிருந்து தண்ணீர் விடப்படும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

டிக்கெட்டில்லா இரயில் பயணம்

கடும் தண்டனை

விதிக்கச் சட்டத் திருத்தம்

புதுடில்லி, நவ. 9—

இரயில் வண்டிகளில் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்வோருக்குக் கடுமையான தண்டனை விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்திய இரயில்வேச் சட்டத்தில் இதற்கான திருத்த மசோதா ஒன்று வருகிற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

தற்போது, இரயில்வேச் சட்டம் 112-ன்படி, டிக்கெட் இல்லாமல் பயணம் செய்பவருக்கு ரூ. 100 வரை அபராதம் விதிக்கப்படுகிறது. குறைந்தபட்ச அபராதம் எவ்வளவு என்பது சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

கொண்டுவரப்படவிருக்கும் திருத்த மசோதாவில் குறைந்தபட்சம் ரூ 10 என்றும், அதிகபட்சம் ரூ 500 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரயில்வேச் சட்டம் 112, 113 ஆகிய பிரிவுகளின்படி டிக்கெட்டில்லாமலோ, உரிய டிக்கெட் வாங்காமலோ பயணம் செய்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களிடமிருந்து உரிய கட்டணத்துடன் 50 காசு கூடுதலாக வசூலிக்கப்படுகிறது; இனி இந்த 50 காசுக்குப் பதில் ரூ. 10 வசூலிக்கப்படும்.

சென்னையில் ஓர் அசோகா விடுதி!

சென்னை, நவ. 9—

புதுடில்லியில் 'அசோகா — டெல்லி' என்ற பெயரில் மத்திய அரசின் சார்பில் நடத்தப்படும் மிகப் பெரும் ஓட்டலைப் போன்று 'அசோகா—சென்னை' என்ற பெயரில் தமிழகத் தலைநகரிலும் நிறுவ மத்திய அரசு தீர்மானித்திருக்கிறது.

மத்திய அரசினைச் சேர்ந்த இந்திய ஓட்டல் வளர்ச்சிக் குழு இதற்கு ஏற்பாடு செய்துவருகிறது

வெளிநாட்டினர் தங்குவதற்கென்று எல்லா வசதிகளுடனும் இந்த ஓட்டல்கள் முக்கிய நகரங்களில் ஏற்படுத்தப்படும்.

அமெரிக்காவுக்கு கைவினைப் பொருள்கள்

ஏற்றுமதி அதிகரிப்பு

கல்கத்தா, நவ. 11—

கடந்த 8 ஆண்டுகளில் அமெரிக்காவுக்கு இந்தியக் கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி கிட்டத்தட்ட ஐந்து மடங்காகப் பெருகியுள்ளது.

1966—67 நிதி ஆண்டில் இவற்றின் மதிப்பு ஒரு கோடி டாலர் (ரூ. 7½ கோடி); 1958—59 நிதி ஆண்டில் இது 20 இலட்சம் டாலர் (ரூ. ஒரு கோடியே 40 இலட்சம்) ஆக இருந்தது.

இரத்தினக் கற்கள், கம்பள விரிப்புகள், உலோகப் பொருட்கள், மரச் சாமான்கள் முதலியன முக்கிய இந்திய ஏற்றுமதிப் பொருட்களாகும்.

திரையரங்குகளுக்கு அரசு உதவி

திட்டக் குழு யோசனை --- டில்லி பரிசீலனை

சென்னை, நவ. 9—

மாநிலத் தலைநகரங்களில் பொதுத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ திரைப் பட அரங்குகள் கட்டுவதற்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கக்கூடும்.

இதுபற்றிய திட்டம் ஒன்றைத் திட்டக் குழு தயாரித்துள்ளது. மத்திய அமைச்சரவை இந்தத் திட்டத்தைத் தற்போது ஆராய்ந்து வருகிறது.

அண்மையில் படத் தயாரிப்பாளர்களுக்கும் திரையரங்கு உரிமையாளர்களுக்கும் இடையே வளர்ந்த தகராறு காரணமாக புதிய திரைப் படங்கள் வெளியிடுவது தடைப்பட்டது; இதனைத் தொடர்ந்து திட்டக் குழுவின் கலாச்சார ஆய்வுக் குழு, திரையரங்குகள் கட்டுவதற்கான திட்டத்தைத் தயாரித்துள்ளது.

மராட்டிய மாநில அரசு பெரும் அளவில் திரையரங்குகள் கட்டுவதென அண்மையில் முடிவு செய்துள்ளது.

"புதிய அரங்குகள் நகராட்சிகளின் பொறுப்பில் விடப்படும்" என்று அந்த மாநிலத்தின் செய்தித் துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

திட்டக் குழு மராட்டிய மாநிலத்தின் தியேட்டர் பெருக்கத் திட்டத்தை வரவேற்றுள்ளது.

இலங்கை அகதிகட்கு மறுவாழ்வு

5,500 ஏக்கர் நிலத்தில் தேயிலை --- ரப்பர் தோட்டங்கள்

தமிழக அரசு ஏற்பாடு --- அதிகாரி விளக்கம்

சென்னை, நவ. 10—

இலங்கையிலிருந்து அனுப்பப்படும் அகதிகட்கு மறுவாழ்வளிப்பதற்காகத் தமிழக அரசு, வனத் துறைக்குச் சொந்தமான 5,500 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 2000 ஏக்கர் நிலத்தில் ரப்பர் தோட்டமும், நீலகிரி மாவட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 3500 ஏக்கர் நிலத்தில் தேயிலைத் தோட்டமும் ஏற்படுத்தப்படும்.

நீலகிரியில் தற்போது 750 ஏக்கர் நிலம் உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் தோட்டம் வைக்கப்படும் என்றும், எஞ்சியுள்ள நிலம் படிப்படியாக, 15 ஆண்டுக் காலத்துக்குள் தேயிலைத் தோட்டத்துக்குப் பயன்படுத்தப்படும் என்றும் வனத் துறை அதிகாரி கூறினர்.

"கனனியாகுமரியில் ஒதுக்கப்பட்டுள்ள 3,500 ஏக்கர் நிலம் முழுவதும், 5 ஆண்டுக் காலத்துக்குள் ரப்பர் தோட்டமாக மாற்றப்படும்" என்ருர்.

வீட்டை மறந்து நாட்டைக் காத்தீர்கள்

உங்கள் குடும்பநலனை அரசு காக்கும்

முன்னாள் படை வீரர்களிடை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் உரை

சென்னை, நவ. 11—

"நாட்டிற்கான பாதுகாப்பில் படைவீரர்களின் பங்கு பாராட்டப் படக்கூடிய ஒன்ருகும். நாட்டின் எல்லேயைக் காக்கவும், எதிரிகளின் தாக்குதலினின்று தற்காத்துகொள்ளவும் பொதுவாக நிலேயான படை அமைப்பு எப்போதும் இருந்து வருகின்றது.

"நாட்டிற்கு எதிரிகளால் ஆபத்து ஏற்படும்போது -- போர் மூளும்போது திரட்டப்படுகின்ற படை அமைப்பு, போர்க் காலத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு போர் நின்ற பிறகு கலேக்கப்பட்டுவிடும் ; அப்படித் திரட்டப்பட்ட படை வீரர்கள், போர்க் காலத்தில் தீரத்துடன் போராடி நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்திஞலும், அவர்கள் தங்கள் வாழ்க்கை வழி வசதிகளேத் திரட்டிக்கொள்ளப் போர் ஒன்றையே குறிக்கோளாகக் கொள்ள முடியாது ; போர் ஒன்றினேயே அவர்கள் நம்பியிருக்க முடியாது ; 'போர் நீடித்து நடக்கவேண்டும்' என்றும் எதிர்பார்த்துக்கொண்டிருக்க முடியாது !

"ஆகவே, போர்க் காலம் முடிந்ததும் அவர்கள் வேறு வகையில் தங்கள் வாழ்க்கையில் வசதிகளேத் தேடிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிருர்கள்.

"நாட்டிற்காக அவர்கள், தங்கள் சொந்த நலனே மறந்து -- வீட்டைத் துறந்து -- மனேவி மக்களேப் பிரிந்து -- பாடுபட்ட பாங்கினே மதித்து நாட்டு மக்கள் பாராட்டவே செய்கிருர்கள் ; அரசும் அவர்களுக்கு வேண்டிய வசதிகளே அவ்வப்போது செய்துவருகிறது ; இன்னும் பல வசதிகளேச் செய்துதர அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது "

என்று, கல்வி--தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், முன்ஞள் இராணுவத்தினர் சங்க மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"முன்ஞள் போர்ப் படைவீரர்கள் நல்வாழ்விற்காக அரசு பெரு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது; அவற்றில் ஒரு சில முயற்சிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் பல்வேறு பிரச்சினேகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

முன்ஞள் படைவீரர்கள் இந்நாட்டிற்கு ஆற்றிய பணிகளே மதிக்கவும், பாராட்டவும் கடமைப் பட்டவர்களாவோம்; அவர்களே மதிக்கின்ற பாங்கு பொதுவாக அனேவரிடத்திலும் இயல்பாகவே இருந்து வருகிறது.

மத்திய அரசும், மாநில அரசும் அவர்கள் நல்வாழ்விற்கான பல்வேறு முயற்சிகளே எடுத்துக் கொண்டு இயன்றவற்றையெல்லாம் அவ்வப்போது நிறைவேற்றி வருகின்றது.

உங்களது குறைபாடுகள் என்னென்ன என்பதை மாநாட்டின் மூலம் கலந்தாலோசித்து,கேட்க வேண்டிய கோரிக்கைகள் எல்லாவற்றையும் சேஞுங்கள் ; அவைகளே அதிகாரிகள் பரிசீலனே செய்து--செய்ய முடிந்தவைகளே--நிதி வாய்ப்பை அனுசரித்து---செய்து தரும்.

உடனடியாகச் செய்ய முடிந்தவைகளே உடனடியாகவும், ஓராண்டு, ஈராண்டுகளில் செய்துமுடித்திடக்கூடியவைகளே அவ்வப்போது செய்துதருவதற்கான முறையில் பகுத்து வகுத்து 'ஒன்றை செய்வதாயினும் நன்றே செய்வோம்; நன்றே செய்வதையும் இன்றே செய்வோம்' என்பதற்கு ஏற்றபடி முயற்சிகளே மேற்கொள்வோம். அதற்கு நீங்கள் இந்த மாநாட்டின் மூலம் உங்கள் குறைபாடுகளே அரசுக்குத் தெரிவிக்க உங்களில் ஐந்தாறு பேர் கொண்ட குழுவினே அமைத்து அவர்களே எங்களிடம் அனுப்பிவையுங்கள்; நாங்களும் கலந்தாலோசித்து, முன்ஞள் போர்ப் படை வீரர்களுக்கு வேண்டியவைகளேச் செய்து தருவோம் என உறுதி கூறுகிறேம்."

அரசு ஊழியர்களுக்கு அகவிலேப்படி உயர்வு

அமைச்சர் மாதவன் அறிவிப்பு

மதுரை, நவ. 11—

"மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி, மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலேப் படி எப்போதெல்லாம் அதிகப் படுத்தப்படுகிறதோ அப்போதெல்லாம் மாநில அரசு ஊழியர்களின் அகவிலேப் படியும் உயர்த்தப்பட வேண்டியிருக்கிறது.

"இவ்வாறு உயர்த்தப்படும் அகவிலேப் படி, தமிழக அரசு ஊழியர்களுக்கு எப்போது தரப்படும் என்பதுபற்றித் தமிழக அரசு அறிக்கை வெளியிடும் ; அதாவது, இன்னும் ஒரு மாத காலத்திலா -- அல்லது எப்போது கிடைக்கும் என்பது விரைவில் அறிவிக்கப்படும் "

என்று, சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள், தமிழக நீதித் துறை -- நிர்வாகத் துறை ஊழியர்கள் சங்க மூன்ருவது மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"'அரசு ஊழியர்களுக்கான ஊதியக் குழு ஒன்று நியமிக்கவேண்டும்' என ஊழியர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கோருகின்றனர்; அவர்கள் கோரிக்கைப்படி ஒவ்வொன்றையும் செயல்படுத்துவதற்கு அரசிடம் போதிய வள வாய்ப்புக்கள் இருக்கவேண்டும். அப்படியில்லாமல், ஊதியக் குழு ஒன்றை நியமிப்பதில் பயன் ஒன்றுமில்லே.

"ஊதியக் குழு எதனேயும் நியமிப்பதற்குமுன் மத்திய அரசு, மாநில அரசுகளேக் கலந்தாலோசிப்பது அவசியமாகும்; அவ்வாறு கலந்தாலோசிக்கப்படுமாஞல், மாநில அரசுகள், தங்களுடைய நிதி வசதிகள் -- பொறுப்புக்கள் ஆகியவைபற்றிக் கருத்தறிவிக்க இயலும்.

"மத்திய அரசு ஊழியர்களுக்காக ஒரு தரப்பானதாக ஊதியக் குழு ஒன்றை நியமிப்பதும், அதன் சிபாரிசுகளேச் செயல் படுத்துவதும், மாநில அரசுகளே நேரடியாகப் பாதிக்கும்."

நீதிபதி அறிவுரை

மாநாட்டிற்குத் தலேமைதாங்கிய நீதிபதி கே. வீராசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

" அரசு ஊழியர்கள் சங்கமானது ஆலேகளில் செயல்படும் தொழிற்சங்கங்களேப் பின்பற்றிச் செயல்படுவதைத் தவிர்க்கவேண்டும்.

" அரசு ஊழியர்கள் தாங்கள் நிறைவேற்றும் தீர்மானங்களே நன்கு பரிசீலனே செய்யவேண்டும்; அதன் பின்னர், அவற்றில் செயல் படுத்தவும் ஏற்கவும் தகுதிவாய்ந்தவற்றை அரசுக்கு அனுப்பவேண்டும்."

முன்னாள் படை வீரர்கள் குடும்பங்களுக்கு உதவி

தமிழக அரசு காட்டும் அக்கறை

ஒன்றுபட்டுக் கோரிக்கை எழுப்ப அமைச்சர் முத்துசாமி அறிவுரை

சென்னை, நவ. 11—

'முன்ஞள் இராணுவத்தினரின் நலனில் தமிழக ஆளுநரும், முதலமைச்சரும் மிகுந்த அக்கறை கொண்டிருக்கின்றனர்.

'முன்ஞள் இராணுவத்தினரின் குழந்தைகளின் படிப்புக்கு உதவிப் பணம் வழங்குவது சம்பந்தமான விதிகளேத் திருத்துவது பற்றியும் அரசு பரிசீலனே செய்துகொண்டிருக்கிறது.

'உதவித் தொகை அளிப்பது, குடும்பத்துக்கு எவ்வளவு 'பென்ஷன்' தொகை அளிக்கப்படுகிறது என்பதை மட்டும் பொறுத்ததாக அல்லாமல், 'குடும்பத்தில் எவ்வளவு பேர் இருக்கிருர்கள் -- குடும்பத்தின் பொருளாதார நிலேமை என்ன' என்பதையும் கவனித்துப் படிப்புக்கான உதவித் தொகையை அளிக்கும் வகையில் விதிகளேத் திருத்த முடியுமா என ஆராயப்படுகிறது.

"முன்ஞள் இராணுவத்தினருக்கு அரசு ஒதுக்கும் நிலங்கள், அவர்கள் இருக்குமிடத்திற்கு வெகு தூரத்திற்கப்பால் இருந்தால், அதற்காக 'நிலம் வேண்டாம்' என நிராகரிக்காமல் அங்கு சென்று பயிரிடுமாறு கேட்டுக்கொள்கிறேன் "

என, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் மாநில முன்ஞள் இராணுவத்தினர் சங்க மாநாட்டிற்குத் தலேமை தாங்கிப் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"முன்ஞள் படை வீரர்கள் நாட்டிற்கு ஆற்றுவந்த தொண்டு பாராட்டிப் போற்றக்கூடிய ஒன்று; அவர்கள் வாழ்வில் வளம் பொங்க எல்லாவிதமான உதவிகளேயும் செய்யவும் அதற்கான முயற்சிகளே மேற்கொள்ளவும் அரசு பெருமுயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

அவர்களுக்குக் கணிசமான அளவில் -- உருப்படியான உதவிகளேச் செய்துதர அரசு தீவிரமான முயற்சிகளே எடுத்துக் கொண்டிருக்கிறது. அதிகாரிகள் அதில் தீவிர கவனம் செலுத்திவருகிருர்கள்.

படைவீரர்களுக்கு அரசு இந்தப் பேருதவிகளேச் செய்து தர வேண்டுமாஞல், முன்ஞள் இராணுவத்தினர் முதலில் தங்களுக்குள் இருக்கின்ற போட்டி-பூசல்களே மறந்து ஒன்றுபட வேண்டும்.

உங்கள் குறைபாடுகளேத் தவிர்க்க மாவட்ட அளவில் ஒரு சங்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்; பல்வேறு சங்கங்கள் இருப்பதும் அவர்கள் ஒருவருக்கொருவர் குறை கூறிக்கொள்வதும் எங்களேச் சங்கடத்திற்குள்ளாக்குகிறது.

நீங்கள் படை வீரர்களாகப் பணியாற்றிய காலத்தில் எப்படிக் கட்டுப்பாட்டுடன் இருந்திருக்கிறீர்கள் -- படையில் இருந்தபோது உள்ள கட்டுப்பாடும் ஒழுங்கும், அதனின்று விலகிவிட்டாலும் அதற்குப் பிறகும்கூட தேவைப்படக்கூடியதுதான்.

ஆகவே, கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நீங்கள் கடைபிடிக்க வேண்டும்.

நீங்கள் ஒன்றுபட்டு மாவட்ட அளவில் அமைப்புகளே ஏற்படுத்தி அதன்மூலம் உங்கள் குறைகளே மாவட்டக் கலெக்டருக்குத் தெரியப்படுத்திஞல் அவர் உங்கள் குறைகளேத் தவிர்க்க ஆவன செய்வார்.

உங்களில் ஐந்தாறு பேர் கொண்ட குழுவினே ஏற்படுத்தி அந்தக் குழுவை அரசிடம் அனுப்பிவைத்தால் அவர்களுடன் கலந்தாலோசித்து உங்கள் கோரிக்கைகளே நிறைவேற்ற அரசு தயாராக இருக்கிறது."

துவக்கத்தில் முன்ஞள் இராணுவத்தினர் சங்கத் தலேவர் நாச்சிமுத்து அனேவரையும் வரவேற்ருர்; மற்றும் பலர் பேசினர்.

பரிசுச் சீட்டு அச்சிடுவதற்குப் புதிய இயந்திரம்

பரிசுத்தொகையைப் பயனுள்ளவகையில் செலவிடச் செய்யத் திட்டம்

செய்தியாளர்களிடை அமைச்சர் மாதவன் அறிவிப்பு

சென்னை, நவ. 11—

"தமிழகத்தில் பரிசுச் சீட்டுகள் அச்சிடுவதற்கான நவீன முறை அச்சுக் கருவிகள், ஜெர்மானிய நாட்டிலிருந்து வரவழைக்கப்படவிருக்கின்றன"

என்று அமைச்சர் செ. மாதவன், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது :—

"தற்போது பரிசுச் சீட்டுகள் தமிழக அரசு அச்சகத்தில் அச்சாகின்றன ; எனினும், அரசு அச்சகத்திற்கு இதஞல் ஏற்படும் வேலேப் பளு காரணமாக இந்த வேலேயைச் செய்து முடிப்பது கடினமாக உள்ளது.

வெளிநாட்டு இயந்திரங்கள் இறக்குமதியானதும், பரிசுச் சீட்டு அச்சிடும் வேலே துரிதமாகிவிடும்; உடனுக்குடன் எல்லா மாவட்டங்களுக்கும் தேவையான பரிசுச் சீட்டுக்களே விற்பனேக்கு அனுப்ப முடியும்.

தமிழக அரசு தற்போது நடத்தும் பரிசுச் சீட்டு குலுக்கும் முறையானது உலகத்திலேயே சிறந்த முறையாகக் கருதப்படுகிறது.

பரிசு பெறுபவர்கள் தங்கள் பரிசுத் தொகையை அறிவார்ந்த முறையிலும், பயன்தரும் வேலேகளிலும் ஈடுபடுத்தும்படிச் செய்வதற்குத் தமிழக அரசு திட்டம் ஒன்று வகுத்து வருகிறது."

திருமணங்கள் அனேத்தும் பதிவு

தமிழக அரசு ஆராய்வதாக அமைச்சர் தகவல்

சென்னை, நவ 10—

"நாட்டில் நடைபெறும் திருமணங்கள் அனேத்தும் பதிவு செய்யப்பட வேண்டுமென்று அரசு மக்களேக் கட்டாயப்படுத்த முடியாது; எனினும், திருமணங்களேப் பதிவுசெய்து கொள்வது அவசியமேயாகும் "

என்று சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன், செய்தியாளர்களிடம் கூறினர்.

"எல்லாத் திருமணங்களேயும் மக்கள் தாமாகவே முன்வந்து தங்கள் நலன் கருதிப் பதிவு செய்து கொள்வதற்கான வழிமுறை குறித்தும் அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது "

என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நிக்சனேக் கொல்லச் சதி

மூன்று அராபியர் கைது

நியூயார்க், நவ. 10—

அமெரிக்காவின் புதிய குடியரசுத் தலேவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரிச்சர்டு நிக்சனேக் கொல்லச் சதி செய்ததாக மூன்று பேரைக் காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவில் குடிபுகுந்துள்ள அராபியரான ஒரு நபரும், அந்த நபரின் இரண்டு பிள்ளேகளுமே கைதானவர்கள்.

இவர்கள் யேமனிலிருந்து அமெரிக்காவில் குடிபுகுந்தவர்களாம்.

மற்றும் இரண்டு பேர் இந்தச் சதியில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

நடக்க இருப்பவை

13--11--68

அருப்புக்கோட்டை

நகர தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு புளியம்பட்டி தியாகராயர் வாலிபர் சங்கம் முன்னிலேயில் ; தலேவர் : சிவசண்முகசுந்தரஞர் ; பேசுவோர் : அமைச்சர் செ. மாதவன், எஸ். எஸ். தென்னரசு, வே. தங்கபாண்டியன் எம்.எல்.சி, மு. சுந்தரராசன், ப. பெ. ந. நல்லதம்பி, ஆ. குருசாமி.

ROJA
ரோஜா பாக்கு & புகையிலே
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களே ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னே-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.